இந்து தமிழ் திசை | www.hindutamil.in

மாலை வகுப்புகளுக்கு புதிதாக 3 பாடப் பிரிவுகளுக்கு அனுமதி

# திருச்சி பெரியார் அரசு கல்லூரியில் மாணவர் சேர்க்கை இடம் 1,540 ஆக உயர்வு

**திருச்சி**

திருச்சி பெரியார் அரசு கல்லூரியில் நிகழாண்டு மாலைநேர வகுப்புகளுக்கு புதிதாக 3 பாடப் பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக 120 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளதால், கல்லூரியின் மாணவர் சேர்க்கை இடம் 1,540 ஆக உயர்ந்துள்ளது.

திருச்சி தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) 2025-2026-ம் கல்வி ஆண்டுக்கான இளநிலை கலை மற்றும் அறிவியல் பட்டப்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு மே 27-ம் வரை விண்ணப்பப்பதிவு நடைபெறும். எனவே, கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளில் விண்ணப்பிக்க விரும்பும் மாணவ, மாணவிகள் இக்கல்லூரியின் 'இ- சேவை' மையத்தில் உள்ள சேர்க்கை உதவி மையத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்' என கல்லூரி முதல்வர் க.அங்கம்மாள் தெரிவித்துள்ளார்.

கல்லூரியில் 17 இளங்கலை மற்றும் இளம் அறிவியல் பாடப் பிரிவுகள் உள்ளன. காலை நேர, மாலை நேர வகுப்புகள் என 2 ஷிப்ட்களில் (சுழற்சி முறையில்) கல்லூரி இயங்குகிறது. 2 ஷிப்ட்களிலும் சேர்த்து 1,420 மாணவர் இருக்கைகள் உள்ளன.

**புதியப் பாடப் பிரிவுகள்**

ஏற்கெனவே, தமிழ், ஆங்கிலம், கணினி அறிவியல், வணிகவியல், வேதியியல் ஆகிய பாடப் பிரிவுகளில் 2 ஷிப்ட்கள் (மாலை நேர வகுப்புகள்) உள்ளன. இந்நிலையில் மாலை நேர வகுப்புகளில் நிகழாண்டு தமிழ் வழி வரலாறு, பொருளாதாரம், ஆங்கில வழி கணினி பயன்பாட்டியல் ஆகிய பாடப் பிரிவுகள் புதிதாக தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய பாடப் பிரிவுகளுக்காக 120 இடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நிகழாண்டு மாணவர் சேர்க்கைக்கான அரசாணை வந்ததும் புதிய பாடப் பிரிவுகளுக்கு மாலை நேர வகுப்புகளுக்கான சேர்க்கை தொடங்கப்படும் என கல்லூரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கெனவே முதலாமாண்டு மாணவர்களுக்காக 1,420 இடங்கள் உள்ள நிலையில், மாலை நேர வகுப்புகளுக்கு கூடுதலாக 120 இருக்கைகள் உருவாக்கப்பட்டுள்ளதால், கல்லூரியில் இருக்கை எண்ணிக்கை 1,540 ஆக உயர்ந்துள்ளது.